(b) whether representations were received from Harijan representatives; and

(c) if so, the action taken in the matter?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) ஆம். திரு. சின்னப்பையன் என்ற ஒருவரிடமிருந்து அரசுக்கு முறையீடு வந்துள்ளது.

(உ) ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருடையவும், உதவி காவல்துறைத் தலைவருடையவும் கருத்துரைகள் கோரப் பட்டன. முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச் சாட்டுகள், தவறானவைகளாக இருப்பதாகக் காணப்படுகிறது.

திரு. எஸ். வடிவேல்: அங்கே அமைச்சர் அவர்களுக்கும், இலாக்காவினருக்கும் அந்தச் செய்தியினை அனுப்பிய பிறகு போலீஸ் துறையினர் அரிசனச் சேரிக்குள் புகுந்து அடித்திருப்பதாகத் தகவல் வந்திருக்கிறதே, அதுபற்றி அரசுக்கு ஏதாவது தகவல் உண்டா? உண்டென்றால் அதன்மீது எடுக்கப் பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: சின்னப்பையன் என்ற ஒருவரிடம் இருந்து புகார் தந்தி மூலம் வந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 21—4—1973 அன்று அரிசனங்களுக்கும், முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட தகராறுகளுக்குப் பிறகு, போலீஸ் ஏதும் அரிசனச் சேரிக்குள் புகுந்து துன்பம் விளைத்ததாக விரம் இல்லை.

House-sites for Harijans in Tiruttani taluk

* 161 *Q.*—Thiru A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal under the consideration of the Government to provide house-sites for Harijans in N. N. Kandigai in Tiruttani taluk?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஆம். என். என். கண்டிகை கிராமத்தில் 45 அரிசனக் குடும்பங்களுக்கு வீட்டுமனை அளிப்பதற்காக நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மாவட்ட ஆட்சியினரால் 13—8—1973-ல் அவார்டு பாஸ் செய்யப் பட்டுள்ளது. விரைவில் பட்டாக்கள் வழங்கப்படும்.